8. பத்திரிகைகளில் வந்துள்ள செய்திகளை ஆதாரமாகக் காட்டி சில உறுப்பினர்கள் பேரவைத் தலைவருக்கு அளித்த மனுக்களில் அ.இ.அ.தி.மு.க.வைச் சேர்ந்த 4 உறுப்பினர்கள் அரசமைப்புச் சட்ட விதிகளின் கீழ் பேரவை உறுப்பினர் பதவி தகுதியின்மைக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்று தெரிவித்துள்ளதையொட்டிய தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மற்றொரு தீர்ப்பு.

மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் பி. மாரப்பன், கே. பொன்னுசாமி, ஆர். அண்ணா நம்பி மற்றும் க. பழனிசுவாமி ஆகியோர் பத்திரிகையில் வந்த செய்திகளை ஆதாரமாகக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் கொ. மாதப்பன், ஆர். மூக்கன், திருமதி பி. லட்சுமி மற்றும் திரு. வெ. இராசு ஆகியோர் 1985 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (ஐம்பத்திரண்டாவது திருத்த) சட்டத்தின் பத்தாவது இணைப்புப் பட்டியலின் கீழ் பேரவை உறுப்பினர் தகுதியின்மைக்கு ஆளாகிவிட்டார்கள் என்று 19—8—1990 ஆம் தேதியிட்ட தங்கள் மனுக்களில் கூறி, அவற்றை எனக்குக் கொடுத்துள்ளார்கள்.

1985 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (ஐம்பத்திரண்டாவது திருத்த) சட்டத்தின் பத்தாவது இணைப்புப் பட்டியலின் 2 வது பாராவின்படி கீழ்க்கண்ட இரு நேர்வுகளில் மட்டுமே ஒரு அரசியல் கட்சி மூலமாகத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப் பட்ட பேரவை உறுப்பினர் தகுதியின்மைக்கு ஆளாகின்றார்.

(1) தான் சார்ந்துள்ள அரசியல் கட்சியிலிருந்து தன்னிச்சையாக அவராகவே அக்கட்சியிலிருந்து விலகினால்; அல்லது

(2) பேரவையில் வாக்கு எடுப்பில் கட்சியால் விடுக்கப்பட்ட கட்டளைக்கு மாறாக வாக்களித்தாலோ அல்லது வாக்கெடுப்பில் பங்கு கொள்ளாமல் இருந்தாலோ தான் தகுதியின்மைக்கு ஆளாகிறார்.

11-55 மணி

மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் கொ. மாதப்பன், ஆர். மூக்கன், திருமதி பி. லட்சுமி மற்றும் வெ. இராசு ஆகியோர் அ.இ.அ.தி.மு.க.-விலிருந்து தன்னிச்சையாக விலகியதற்கு ஆதாரம் ஏதும் இல்லை. எனவே, 1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப்பேரவை உறுப்பினர்கள் (கட்சி மாறுதல் காரணம் கொண்டு தகுதியின்மையாக்குதல்) விதிகளில் 7-வது விதி, உள்விதி (2)-ன் கீழ் மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் பி. மாரப்பன், கே. பொன்னுசாமி, ஆர். அண்ணா நம்பி மற்றும் க. பழனிசுவாமி ஆகியோர் கொடுத்த மனுக்களைத் தள்ளுபடி செய்கிறேன் என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

8 பத்திரிகைகளில் வந்துள்ள செய்திகளை ஆதாரமாகக் காட்டி சில உறுப்பினர்கள் பேரவைத் தலைவருக்கு அளித்த மனுக்களில் அ.இ.அ.தி.மு.க.-வைச் சேர்ந்த 4 உறுப்பினர்கள் அரசமைப்புச் சட்ட விதிகளின் கீழ் பேரவை உறுப்பினர் பதவி தகுதியின்மைக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்று தெரிவித்துள்ளதையொட்டிய தீர்ப்பு.

THIRU KUMARI ANANTHAN : Sir, point of clarification.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்ப்பின்மீது எந்த Clarification-ம் கிடையாது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (21–8–1990) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை 11-56 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

1. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைய விதி முறைகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 1–12–1989 ஆம் நாளிட்ட 637 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

2. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைய விதி முறைகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 29–11–1989 ஆம் நாளிட்ட 631 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

3. தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் ஆளுகைக்குள் வரும் சில எண்ணெய் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களால் கொள்முதல் செய்யப்பட்ட நிலக் கடலைக்கு விதிக்கக் கூடிய வரியினை ரத்து செய்வது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 29–1–1990 ஆம் நாளிட்ட 53 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].